# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் **13.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 2967/SCIC/2024**

திரு தா. லோகநாதன் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பொதுஅதிகார அமைப்பு
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருப்போரூர் - 603 110
செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **11.12.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 19.01.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 05.03.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், திருப்போரூர் என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 11.12.2023 தேதியிட்ட மனுவில் சிறுதாவூர் கிராமத்தில் 01.01.2018 முதல் 10.12.2023 வரையிலான அனைத்து வீட்டு வரி ரசீதுகளின் சான்றிட்ட நகல்கள், 01.01.2020 முதல் 10.12.2023 வரையிலான வீட்டுவரி விதிப்பு தீர்மானத்தின் பதிவேட்டின் நகல், 01.04.2018 முதல் 10.12.2023 வரையிலான கிராம துப்புரவு பணி, துப்புரவு வாகன எண்ணிக்கை மற்றும் பணியாளர் பற்றிய தகவல் குறித்து 3 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7ன் படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்பட்டுகிறது.** பொதுத் தகவல் அலுவலரும் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆகவே, வழக்கானது 07/08/2026 தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிடப்படுகிறது.

3. **ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையினை பெற்ற பின்னரும், பொதுத் தகவல் அலுவலர் எந்தவித முன்னறிவிப்புமின்றியும் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகவில்லையென்பதை ஆணையம் பதிவு செய்கிறது. எனவே, ஆணையத்தின் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகாத காரணத்தால் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு சைமன் ஜெரால்டு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், திருப்போரூர் என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை ஆணையத்தின் 07/08/2026 தேதிய விசாரணையின்போது ஆஜராகி சமர்ப்பிக்குமாறு மேற்படி அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2967/SCIC/2024</u>**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

திரு சைமன் ஜெரால்டு,
பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருப்போரூர் - 603 110, செங்கல்பட்டு மாவட்டம்.

**மனுதாரர்**

திரு தா. லோகநாதன்,
த/பெ தாமோதரன்,
3/33, துளுக்கானத்தம்மன் கோவில் தெரு,
எண்.64, பொருந்தவாக்கம், ஆமூர்,
திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் 603 105

**நகல்**

மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
**சென்னை** 600 035

TK/PS